සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இறுதியாண்டுப் பரீட்சை - 2020

**வரலாறு** / ඉතිහාසය -I    தரம் : 10    நேரம்: 1 மணித்தியாலம்

(i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(ii) **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. மகாவம்சத்தின் முதலாம் பாகம் எழுதப்பட்டு நான்கு நூற்றாண்டுகளின் பின்னர் அதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் பாளிமொழியில் எழுதப்பட்ட டீகாவ எனும் உரை நூல் எவ்வாறு அழைக்கப்பட்டது?
   1) உத்தரவிஹார அட்டகதா    2) தீப வம்சம்
   3) வினய அட்டகதா    4) வம்சத்துப்பகாசினி

2. கோட்டே இராசதானி முதல் கண்டி இராசதானி வரையிலான காலப்பகுதி பற்றிய வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் இலக்கிய நூல்கள் எவை?
   1) தூது காவியம், புகழ்காவியம், போர்க்காவியம்
   2) புகழ் காவியம், தூதுகாவியம், மற்றும் கல்வெட்டுக்கள்
   3) போர்க்காவியம், புகழ்காவியம், வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள்
   4) வெளிநாட்டு இலக்கிய மூலாதாரம், தொல்பொருள் மூலாதாரம், புகழ் காவியங்கள்

3. A. எனும் நிரலில் இலங்கை பற்றிய குறிப்புக்கள் எழுதியுள்ள வெளிநாட்டு இலக்கியங்களும் B எனும் நிரலில் அவற்றுக்குரிய நூலாசிரியர்களும் தரப்பட்டுள்ளன. இவற்றை இணைப்பதனூடாக பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| • ஒல்லாந்து இலக்கியம் | A. பாகியதேரரின் தேச சஞ்சார அறிக்கை |
| • போர்துக்கேய இலக்கியம் | B. ரொபர்ட் நொக்ஸ் அவர்களின் அன்றைய இலங்கை |
| • சீன இலக்கியம் | C. பிலிப்ஸ் பல்டியஸ் அவர்களின் இலங்கை பற்றிய நூல் |
| • ஆங்கில இலக்கியம் | D. ரிபைரோ என்பவரின் இலங்கை பற்றிய நூல் |

   1) ABCD    2) CDAB    3) ABDC    4) DCAB

4. இலங்கையில் மிகப் புராதன கல்வெட்டுக்கள் எழுதப்பட்ட மொழி யாது?
   1) சிங்களம்    2) பாளி    3) பிராமி    4) தமிழ்

5. சுமார் 38 000 வருடங்களுக்கு முன்னர் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கற்குகையொன்றைத் தெரிவு செய்க.
   1) அத்தனகொட அலுலேன    2) கித்துல்கல பெலிலேன
   3) குருவிட்ட பட்டதொம்பலென    4) பாகியங்கல குகை

6. கற்காலத்தில் நிலவிய சடங்கு சம்பிரதாயங்கள் பற்றி ஓரளவுக்கேனும் அறிந்து கொள்ள முடிவது பின்வருவனவற்றுள் எம்முறையிலாகும்?
   1) குடியேற்றங்கள்    2) உணவு    3) மரணச் சடங்கு    4) தொழிநுட்பம்

7. முன்வரலாற்றுக்காலத்திற்குரிய வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ள உதவும் பிரதேசங்களில் ஒன்று,
   1) உடரஞ்சாமடம    2) இப்பன்கடுவ    3) கலேவெல    4) ஹல்துமுல்ல

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



kalvi.lk

8. வரலாற்றுக்காலத்தில் கிராமங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு பத்துப் பேரைக்கொண்ட சபை ஒன்றின் மூலம் தீர்வு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் கல்வெட்டு யாது?
   1) புத்தன்னேஹெல கல்வெட்டு
   2) களுதிய பொகுண கல்வெட்டு
   3) அநுராதபுர சுவர் கல்வெட்டு
   4) வேவெல்கெடிய கல்வெட்டு

9. பின்வரும் நிகழ்வுகளுக்குரிய மன்னன் யார்?
   பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு அப்பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்தல்
   அநுராதபுரத்தை தனது தலைநகராகத் தெரிவு செய்தல்
   தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களுக்கு எல்லைகள் வகுத்தல்
   1) வலகம்பாகு மன்னன்
   2) பண்டுகாபய மன்னன்
   3) தேவநம்பிய திஸ்ஸ மன்னன்
   4) துட்டகைமுனு மன்னன்

10. தந்தையிடமிருந்து மகனுக்கு அரசுரிமை கிடைக்கப்பெற்றமையை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த உதாரணம் யாது?
   1) துட்டகைமுனு மன்னனிடமிருந்து சத்தாதிஸ்ஸ மன்னனுக்கு ஆட்சி கிடைத்தல்
   2) யட்டாலதிஸ்ஸ மன்னனிடமிருந்து சுப மன்னனுக்கு ஆட்சி கிடைத்தல்
   3) மகாசேன மன்னனிடமிருந்து வங்க நாசிக திஸ்ஸ மன்னனுக்கு ஆட்சி கிடைத்தல்
   4) தேவநம்பியதிஸ்ஸ மன்னனிடமிருந்து உத்திய மன்னனுக்குக் கிடைத்தல்.

11. சக்கரவத்தி எனும் அரச கோட்பாட்டைப் பயன்படுத்திய மன்னன் யார்?
   1) மகாசேனன்
   2) நிஸ்ஸங்கமல்லன்
   3) காசியப்பன்
   4) குட்ட கர்ண அபயன்

12. இலங்கையில் அரசியல் அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்ட போது உருவான அரசியல் அதிகாரிகளும் அவர்களது பொறுப்புக்களும் பற்றிய பின்வரும் A. B நிரல்களில் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக இணைப்பதனூடாகப் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| i) ரூப அதெக | A. வர்த்தக நடவடிக்கைகளுக்கான தலைவர் |
| ii) நட அதெக | B. காசு அச்சிடும் பிரிவின் தலைவர் |
| iii) நகர வடிக | C. நாட்டியப் பிரிவின் தலைவர் |
| iv) பன அதெக | D. நகர கட்டட நிர்மாணி |

   1) BCDA
   2) CADB
   3) ACBD
   4) CABD

13. கி.பி. 9ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களில் சட்ட நிர்வாகத் துறையைக் குறிப்பிட பயன்படுத்திய சொல் யாது?
   1) எக்தென் சமியென்
   2) சபாவ
   3) மகலே
   4) அரசசபை

14. பொதுமக்களுக்குத் தேவையான பொது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு கரிசனை செலுத்திய மன்னர்களைத் தெரிவு செய்க.
   1) பண்டுகாபயன், வலகம்பாகு, காசியப்பன்
   2) பாதிகாபயன், கஜபாகு, வசபன்
   3) புத்ததாஸன், 4ம் காசியப்பன், 5ம் மகிந்தன்
   4) 5ம் மகிந்தன், புத்ததாஸன், சத்தாதிஸ்ஸன்

15. புராதன ஆட்சிக்காலத்தில் சர்வதேச தொடர்புகளை பேணிவந்த மன்னர்களும் அவர்கள் தொடர்பு கொண்ட நாடுகளும் பின்வரும் A:B நிரல்களில் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக இணைப்பதனூடாகப் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| i) 1ம் கஜபாகு மன்னன் | A. உரோம் |
| ii) பாதிகாபய மன்னன் | B. சீனா |
| iii) ஆறாம் அக்ர போதி மன்னன் | C. கலிங்கம் |
| iv) 1ம் விஜயபாகு மன்னன் | D. சேர இராச்சியம் |

   1) ABDC
   2) DABC
   3) BCDA
   4) ADBC

16. கண்டி காலத்திற்குரிய வேகிரிய தேவாலயத்துக்கு அருகில் கண்டு பிடித்த கல்வெட்டொன்றில் தடிக எனும் சொல் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது பின்வரும் எக்கைத்தொழில் பற்றிக் குறிப்பிடுகிறது?
   1) தங்கக் கைத்தொழில்
   2) இரும்புக் கைத்தொழில்
   3) தந்தச் செதுக்கல் கைத்தொழில்
   4) நூல் நூற்றல் கைத்தொழில்



kalvi.lk

17. மட்பாண்டக்கைத்தொழிலில் மிக உயர்ந்த தொழிநுட்ப அறிவு வளர்ச்சியடையத் தொடங்கிய காலம் எது?

1) வேட்டை யுகம்
2) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
3) முன் வரலாற்றுக்கு காலம்
4) வரலாற்றுக்காலம்

18. தண்ணீர் விளக்கு, மொஹால், நகா எனும் பதங்கள் குளமொன்றின் எப்பகுதியைக் குறிப்பிடுகிறது?

1) அலைதாங்கி
2) மடைக்கதவு
3) குளக்கட்டு
4) கலிங்கல் தொட்டி

19. மின்னேரியா, கிரிதலே, கவுடுலு, கந்தளாய் ஆகிய குளங்களுக்கு நீரைக்கொண்டு செல்ல வெட்டப்பட்ட கால்வாய் எது?

1) யோத கால்வாய்
2) ரிந்திபெந்தி கால்வாய்
3) மினிப்பே கால்வாய்
4) எலஹர கால்வாய்

20. பின்வரும் உருவிலுள்ள நிர்மாணம் யாது?



1) களிமண் தட்டு
2) ஹஸ்எபு நாணயம்
3) மத்திய காலத்திற்குரிய தங்க நாணயம்
4) கம்பமஸ்ஸ நாணயம்

21. இந்நாட்டு அரசர்கள் கி.பி. 1ம், 2ஆம் நூற்றாண்டுகளில் குளங்களிலிருந்து வரி அறவிடும் பொறுப்பை யாருக்கு ஒப்படைக்கப்பட்டனர்?

1) பௌத்த விகாரைக்கு
2) நீதிமன்றத்திற்கு
3) எக்தென் சமியனுக்கு
4) கம்சபாவுக்கு

22. வரலாற்றுக்கால சமுதாய அமைப்பில் அரச குலத்தவர்களுக்கு அடுத்ததாக கருதப்பட்ட சாதாரண மக்கள் கல்வெட்டுக்களில் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

1) அடிமைகள்
2) குடின்
3) இடையர்கள்
4) விவசாயி

23. பண்டைய ஆட்சியாளர்கள் வகுத்த சட்டத்திற்கும் மரபுகளுக்கும் அமைய அரச நிலங்களில் உற்பத்தியை மேற்கொள்வோரிடமிருந்து அறவிடப்பட்ட வரிப்பங்கு யாது?

1) நான்கில் ஐந்து பங்கு
2) ஆறில் ஒரு பங்கு
3) ஐந்தில் ஒருபங்கு
4) இரண்டில் ஒரு பங்கு

24. கி.மு. 250ம் ஆண்டளவில் இந்நாட்டில் பயன் படுத்தப்பட்ட ஹஸ் எபு நாணயம் எந்நாட்டு வர்த்தகர்களால் இங்கு கொண்டு வரப்பட்டது?

1) வட இந்தியா
2) தென்னிந்தியா
3) சீயம்
4) மியன்மார்

25. இலங்கையில் முதலாம் நகரமயமாக்கல் செயல்திட்டத்தின் கீழ் உருவான பிரதான நகரங்கள் இரண்டும் எவை?

1) அநுராதபுரம், தம்பதெனியா
2) அநுராதபுரம், மாகம
3) பொலன்னறுவை, மாகம
4) கோட்டே, அநுராதபுரம்

26. இந்நாட்டில் மூன்று முறை ஆட்சிபீடமேறிய பாண்டிய வம்சத்து அரசி யார்?

1) லீலாவதி
2) திரிலோகசுந்தரி
3) அனுலாதேவி
4) மித்தா

27. பெலிகலையில் தலதா மாளிகை அமைத்து புனித சின்னங்களைக் கொண்டு வந்து பிரஷ்டை செய்த மன்னன் யார்?

1) இரண்டாம் பராக்கிரமபாகு
2) மூன்றாம் விஜயபாகு
3) நான்காம் விஜயபாகு
4) முதலாம் புவனேகபாகு

28. கண்டி இராச்சியத்தை அண்டியுள்ள பிரதேசங்களை ஒன்று படுத்தி முதன் முறையாக அரசொன்றை உருவாக்கிய மன்னன் யார்?

1) கரலியத்த பண்டார
2) சேனா சம்பத விக்ரமபாகு
3) ஜயவீர பண்டார
4) யமசிங்க பண்டார



kalvi.lk

29. கண்டி இராச்சிய மன்னர்கள் போர்த்துக்கேயருடன் நடத்திய போர்கள் A எனும் நிரலிலும், அப்போர்களுக்கு தலைமை வகித்த போர்த்துக்கேய தளபதிகள் B எனும் நிரிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக இணைப்பதனூடாகப் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| i) தந்துரே | A. தொன் ஜெரனிமோத அசவேது |
| ii) ரன்தெனிவெல | B. தியோ கோத மெல்லோ கெஸ்ரோ |
| iii) கன்னொருவ | C. கொன்ஸ்தாந்தினு த சா |
| iv) பலன | D. ஜெரோலோபேஸ் த சூசா |

1) ABCD　2) BCDA　3) CDAB　4) DCBA

30. இன்றைய சீயம் நிக்காய ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்த கண்டி இராச்சிய மன்னன் யார்?
1) ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்க　2) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க
3) முதலாம் விமலதர்ம சூரியன்　4) ஸ்ரீ விஜய ராஜசிங்கன்

31. கண்டி இராச்சியத்தில் வரி வசூலிப்பு முறைகளுள் ஒன்றான ஹெந்த பத்த வரி என்பது யாது?
1) சலவைக்கான வரி　2) நெசவுக்கான வரி
3) யானை பிடித்தலுக்கான வரி　5) போக்குவரத்துக்கான வரி

32. கண்டி இராச்சியத்தின் பிராந்திய நிர்வாகத்தில் காணப்பட்ட கோறளையில் ஒவ்வொரு குலத்தவருக்கும் வழங்கப்பட்ட பதவி எவ்வாறு அழைக்கப்பட்டது?
1) முகாந்திரம்　2) கோறளைமார்　3) ரட்டேரால　4) விதானை

33. மத்திய காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் சமய செயற்பாடுகளிலும் சட்டக்கல்வி பயிலும் போதும் பயன்படுத்தப்பட்ட மொழி யாது?
1) கிரேக்கம்　2) இலத்தின்　3) அரபு　4) ஆங்கிலம்

34. டிவினா கொமிடியா, லோராட்டாவுக்கு எழுதிய கவிதை ஆகிய நூல்களை எழுதிய எழுத்தாளர்கள் முறையே
1) தாந்தே, பெற்றாக்　2) பெற்றாக், சேர் தோமஸ் மூர்
3) பிரான்ஸிஸ் பேக்கன், தாந்தே　4) வில்லியம் ஷேக்ஸ்பியர், பொக்காஷியோ

35. மறுமலர்ச்சிக் காலத்தில் சிற்பக்கலை சிறப்பிடம் பெற்றது. இக்காலத்தில் சிலைகள் வடிவமைப்பதில் காணப்பட்ட சிறப்பம்சம் யாது?
1) கருங்கல் பயன்படுத்தல்　2) மரப்பலகை பயன்படுத்தல்
3) பளிங்குக் கல் பயன்படுத்தல்　4) உலோகம் பயன்படுத்தல்

36. இத்தாலியில் புதிய சித்திரக்கலை தோற்றம் பெற்ற நகரம் யாது?
1) வெனிஸ்　2) நேபல்ஸ்　3) ஜெனோவா　4) புளோரன்ஸ்

37. மத்திய காலத்தில் ஆசிய நாடுகளின் வர்த்தகத்தில் ஏகபோக உரிமை பெற்றிருந்த இனத்தவர் யார்?
1) போர்த்துக்கேயர்　2) ஒல்லாந்தர்　3) முஸ்லிம்கள்　4) ஆங்கிலேயர்

38. போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது இலங்கையில் காணப்பட்ட இராச்சியங்கள் எவை?
1) கோட்டே, மலையகம், யாழ்ப்பாணம்　2) கோட்டே, மலையகம், கொழும்பு
4) யாழ்ப்பாணம், மலையகம், கண்டி　4) யாழ்ப்பாணம், மலையகம், களுத்துறை

39. 1521 இல் ஏற்பட்ட விஜயபாகு கொள்ளையின் பின் கோட்டே இராச்சியம் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது?
1) நான்கு　2) மூன்று　3) இரண்டு　4) ஐந்து

40. ஒல்லாந்தருக்கும் மலையக மன்னனுக்கும் இடையில் மிக பலன் தரும் தொடர்புகள் ஆரம்பமாவதற்கு காரணமாயிருந்த மலையக மன்னன் யார்?
1) 1ம் விமலதர்ம சூரியன்　2) 2ம் இராஜசிங்கன்
3) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்　4) ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன்.

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



kalvi.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

**வரலாறு** / ඉතිහාසය -II | தரம் : 10 | நேரம்: 3 மணித்தியாலம்

- **Iம் பகுதியின் முதலாம் வினாக் கட்டாயமானது.**
- **IIம் பகுதியின் (4)நான்கு வினாக்களுக்கும் III ம் பகுதியின் ஒரு வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்கள் (6) ஆறாகும்.**

## **பகுதி** - I

1. அ) இலக்கம் I இல் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இலங்கைப் படத்திலும் II ல் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உலகப்படத்திலும் குறித்துக் காட்டுக.

I) மாகம, அநுராதபுரம், தம்பதெனியா, தெதுருஓயா, நில்வளா கங்கை, யோதவாவி, பலன, மகா கணதரா வாவி, மட்டக்களப்பு ஊராத் தொட்ட, பட்டதொம்பலேன, எலஹரா கால்வாய்.

**(12 புள்ளிகள்)**

II) சீனா, மலாக்கா நீரிணை, கள்ளிக்கோட்டை, செங்கடல், உரோம், பாரசீகக் குடா.

**(6 புள்ளிகள்)**

ஆ) i) கீழே A,B,C,D எனும் எழுத்துக்களால் தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளுக்குரிய விடைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

A) பௌத்த இராச்சியம் எனும் தேச சஞ்சார அறிக்கையை எழுதிய சீன தேரர்

B) 1ம் விஜயபாகு மன்னனால் புதல்னா எனும் அதிகாரிக்கு நன்றிக் கடனாக வழங்கப்பட்டவை பற்றி எழுதப்பட்ட ஆவணம்.


C) சில காலம் கைவிடப்பட்டு பின்னர் மீளவும் பயிரிடப்படும் சேனைகளுக்கு அநுராதபுர விவசாயிகள் வழங்கிய பெயர்

D) இலங்கைக்கு வருகை தந்த முதல் போர்த்துக்கேய குழுவிற்கு தலைமை வகித்தவர்

(4 புள்ளி)

ii) A, B ஆகிய படங்களை அவதானித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

A



a) இவ்வுருவிலுள்ள சிற்பத்தின் பெயர் என்ன?

b) இதனைக் காணக்கூடிய புனிதத் தலம் யாது?

c) இக்கலைப் படைப்பு எக்காலத்திற்குரியது?

d) இச் சிற்பத்தில் காணப்படுபவர் யார்?

(4 புள்ளி)

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



kalvi.lk

iii) a) இவ்வுருவிலுள்ள நிர்மாணம் யாது?

b) இது கண்டெடுக்கப்பட்ட இடத்தை குறிப்பிடுக.

c) இதனை நிர்மணிக்கப்ப பயன்டுத்திய பொருள் யாது?

d) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள பௌதீக விஞ்ஞான அடிப்படைத் தத்துவம் யாது?

**(04 புள்ளிகள்)**

B



---

## பகுதி - II

1. 1). மகாவம்சம் எழுதுவதற்குப் பயன்படுத்திய துணை நூல்கள் மூன்று தருக. (3 புள்ளி)
   2) இராசரட்டைக் கால வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் பௌத்த நூல்கள் நான்கு தருக. (4 புள்ளி)
   3) வரலாற்றை அறிந்துகொள்வதற்காக இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும்போது கருத்தில்கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)
   4) இலக்கிய மூலாதாரங்களின் பயன்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

2. 1) பின்வருவன வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த இருப்பிடங்கள் ஆகும். இவற்றுள் தாழ்நில ஈரவலயத்துக்குட்பட்ட குகைகள் மூன்றினைத் தெரிவு செய்க.
   - மினிஹாகல் கந்த
   - பாகியங்கல
   - பெல்லம் பெதிபெலஸ்ஸ
   - பட்டதொம்பலேன
   - சீகிரியப் பொத்தான
   - கித்துல் கல
   - புந்தல (3 புள்ளி)

   2) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் பயன்படுத்திய நுணுக்கமான கல்லாயுதங்களினால் பெற்றுக்கொண்ட பயன்பாடுகள் நான்கு தருக. (4 புள்ளி)
   3) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதனின் மரணச்சடங்கு இடம்பெற்ற இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு, அங்கு இடம்பெற்ற மரணச்சடங்கு முறைகளையும் விளக்குக. (5 புள்ளி)
   4) முன்வரலாற்றுக் காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வேறுபடுத்தி அறிந்துகொள்வதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

3. 1) அரசுக்கு முற்பட்ட காலத்தில் இந்நாட்டு நிர்வாக நடவடிக்கைகளில் பங்குபெற்ற அதிகாரிகள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளி)
   2) முழு நாடும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தமையை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டும் வகையில் தேவநம்பியதிஸ்ஸ மன்னன் மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)
   3) நிர்வாகத்தில் நாட்டு மக்களின் நலன்களுக்காக பொது சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் பின்வரும் மன்னர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
   - புத்ததாஸ மன்னன்
   - 5ம் மகிந்தன்
   - 5ம் காசியப்பன் (5 புள்ளி)

   4) புராதன காலத்தில் எமது சமுகத்தில் காணப்பட்ட கைத்தொழில்கள் மூன்றினைக் குறிப்பிட்டு, இக்கைத்தொழில்கள் பற்றி கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பட்டுள்ளவை பற்றியும் விளக்குக.(6 புள்ளி)



kalvi.lk

4. 1) நடை முறை விஞ்ஞானத்தின் அடிப்படைத் தத்துவத்தினைப் பயன்படுத்தி அதனைப் பிரதியீடு செய்வதற்குத் தொடங்கிய காலம் முன்வரலாற்றுக் காலமாகும். இக்காலப்பகுதியில் விஞ்ஞான அறிவைப் பறைசாற்றும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக. *(3 புள்ளி)*

2) ருவன்வெலிசாய கட்டடம் விஞ்ஞான தொழிநுட்ப அறிவைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது. என்பதற்கான ஆதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. *(4 புள்ளி)*

3) சமுதாயத்தின் நன்மை கருதி எமது நாட்டு ஆட்சியாளர்கள் பல சட்டங்களை வகுத்தனர். இவற்றுள் களவெடுத்தல், கொலை செய்தல் போன்ற குற்றங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் இரண்டினை உதாரணங்கள் மூலமாக விளக்குக. *(5 புள்ளி)*

4) சுற்றாடலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்த எமது முன்னைய ஆட்சியாளர்கள் வகுத்த சட்டங்கள் பற்றி 4ம் மகிந்தன், 3ம் உதயன், 5ம் காசியப்பன் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகளை உதாரணங்களினூடாக விளக்குக. *(6 புள்ளி)*

5. 1) இலங்கையில் முதலாம் நகராக்கத்தின் முக்கிய நகரங்கள் வீழ்ச்சியடைவதற்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(3 புள்ளி)*

2) இரண்டாவது நகரமயமாக்கலின் போது உருவான நகரங்களின் முக்கிய நிகழ்வுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளுக்குரிய இராச்சியங்களையும் மன்னர்களையும் எழுதுக.

A. கலிங்க மாகனிடமிருந்து நாட்டை மீட்டெடுத்தல்

*1)*................................................................ *2)*................................................................

B. பன்சிய பனஸ் ஜாதகய எனும் நூலை சிங்கள மொழிக்கு மொழி பெயர்த்தல்

*1)* ................................................................ *2)*................................................................

C. வடக்கில் ஆரியச்சக்கரவர்த்தியின் அதிகாரிகள் சில பிரதேசங்களில் திறை பெறல்

*1)*................................................................ *2)*................................................................

D. சப்புமல் குமாரனின் தலைமையில் படையனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றிகொள்ளல்

*1)*................................................................ *2)*................................................................

*(4 புள்ளி)*

3) உலர்வலய நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைந்த பின்னர் தலைநகரங்கள் ஈரவலயத்தை நோக்கி புலம்பெயர்ந்த போது அங்கு ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தினை விவசாயம் வர்த்தகம் எனும் தலைப்பின் கீழ் ஆராய்க. *(5 புள்ளி)*

4) இரண்டாம் நகரமயமாக்கலின் போது மொழி, இலக்கியத்தில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சி பற்றி பின்வரும் தலைப்பின் கீழ் விளக்குக. *(6 புள்ளி)*

- கல்வி நிலையங்கள்
- முக்கிய பண்டிதர்கள் தோற்றம் பெறல்
- எழுதப்பட்ட இலக்கிய நூல்கள்

6. 1) கண்டி இராச்சியத்துக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் மூன்று தருக. *(3 புள்ளி)*

2) 1ம் விமலதர்ம சூரிய மன்னன் கண்டி இராச்சியத்தின் சட்டபூர்வ தன்மையை நிலைநாட்டிக்கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள் நான்கு தருக. *(4 புள்ளி)*

3) நாயக்க வம்சத்து மன்னனாக இருந்த போதிலும் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. *(5 புள்ளி)*

4) கண்டி இராச்சியத்தின் நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெற்ற விதம் பற்றி பின்வரும் தலைப்பின் கீழ் சுருக்கமாக விளக்குக. *(6 புள்ளி)*

- மகவாசல
- பிராந்திய நிர்வாகம்
- வரி (பத்தே) வசூலிப்பு



kalvi.lk

7. 1) ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருகை தந்தமைக்கான நோக்கங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

2) கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்த போர்த்துக்கேய தளபதிகள் சிலர் கீழே தரப்பட்டுள்ளனர். இவர்களோடு போரிட தலைமை வகித்த கண்டி இராச்சிய மன்னர்களை ஒழுங்கு முறையாகத் தருக. (4 புள்ளி)

1. ஜேரோலோபேஸ்த சூசா ..................................................................
2. தொன் ஜெரோனிமோத அசவேது ..................................................................
3. கொன்ஸ்தாந்தினு த சா ..................................................................
4. தியோகோ த மெல்லோ ..................................................................

3) கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோள்களில் காணப்படும் சிறப்பியல்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

4) உச்ச நிலையிலான வர்த்தக இலாப மீட்டுவதில் ஒல்லாந்தரின் குறிக்கோள்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

## பகுதி III

8. 1) மறுமலர்ச்சிக் காலத்திலேற்பட்ட அறிவு வளர்ச்சியின் விளைவாக திருச்சபையில் இருந்த குறைபாடுகள் விமர்சனத்துக்குள்ளாகின. இவ்வாறு விமர்சித்தவர்கள் மூவரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்களின் தாய்நாட்டை முன்னால் எழுதுக.

- ஜோன் வைக்கிளிப் .................................................
- இராஸ்மஸ் ...................................................
- மாட்டின் லூதர் ................................................... (3 புள்ளி)

2) ஐரோப்பாவில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்ட துறைகள் 4 இனைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

3) மறுமலர்ச்சிக்காலத்தில் மனிதன் மேன்மையானவன் என்ற கொள்கை வளர்ச்சியடைந்ததன் காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

4) மறுமலர்ச்சிக்காலத்தில் மொழி இலக்கியத்துறைகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பற்றி கீழே தரப்பட்டுள்ள தலைப்பினூடாக விளக்குக.

- கிரேக்க, இலத்தின் மொழிகளில் ஏற்பட்ட மலர்ச்சி
- தோற்றம் பெற்ற எழுத்தாளர்கள்
- எழுதப்பட்ட நூல்கள் (6 புள்ளி)

9. 1) மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சி காரணமாக புவி தொடர்பான புதிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட மூவரைப் பெயரிடுக. (3 புள்ளி)

2) மறுமலர்ச்சிக்காலத்தில் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட பின்வரும் நபர்கள் கண்டு பிடித்த பிரதேசங்களை முன்னால் எழுதுக.

A. பார்த்தலோமியோ டயஸ்
B. வாஸ்கோட காமா
C. கிறிஸ்டோபர் கொலம்பஸ்
D. பேர்டினன் மகலன் (4 புள்ளி)

3) புதிய கடல் வழியைக் கண்டு பிடிக்கக் கூடிய சாதகமான சூழல் அக்கால ஐரோப்பாவில் காணப்பட்டமையை எடுத்துக்காட்டும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

4) மறுமலர்ச்சியானது இலங்கை மீது பின்வரும் துறைகளில் எவ்வாறு தாக்கம் செலுத்தின என்பதை சுருக்கமாகத் தருக. (6 புள்ளி)


- அரசியல் மாற்றம்
- பொருளாதார மாற்றம்
- சமுக பண்பாட்டு மாற்றம்

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



kalvi.lk

(01) (අ) (i)
(01) (*a*) (i)
(01) (அ) (i)






kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.